**Minutes of the Public Hearing held on 23.10.2024 at 11.00 a.m at N.A.P. Mahal, Nadu Palli Street, Ayangudi, Kattumannarkoil Taluk, Cuddalore District with respect to the Project of "Construction of Barrage with head sluices across the River Coleroon (12 km downstream of Lower Anicut) at RD 74/3 Mile in Adhanur Village, Kattumannarkoil Taluk Cuddalore District with Cultural Command Area - 6601 Ha (53 Nos.Villages) and Kumara Mangalam Village, Mayiladuthrurai Taluk & District with Cultural Command Area - 2558 Ha (35 Nos.Villages) with total Cultural Command Area - 9159 Ha (<10,000 Ha) for Ayacut development through North and South Rajan canals."**

**Presents:-**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. M. Rajasekaran | - District Revenue Officer, Cuddalore District. |
| 2. | Selvi. Rashmi Rani | - Sub Collector, Chidambaram, Cuddalore District. |
| 3. | Tmt. G. Gajalakshmi | - District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Cuddalore. |
| 4. | Public Participation and other Government Officials | - (Copy of Attendance enclosed) Annexure-1 |

---000---

The Public hearing was started by 11.00 a.m and the District Environmental Engineer, TNPCB, Cuddalore welcomed the District Revenue Officer, Cuddalore District, Sub Collector, Chidambaram, Cuddalore District, Government Officials and the General public. The reason for conducting the public hearing was briefed and the public were requested to give their views/comments on the project either in writing or oral, one by one by mentioning their name and place after the project details were explained by the project proponent. The project consultant explained the project details through power point presentation..

After the presentation, the public represented their views / comments which are as follows:

**1. Mr. Jayaraman, Adhanur**

The Residents of Adhanur village are not benefitted by the construction of this Barrage. There is no proper irrigation and drainage facility in this area. Proper

compensation has not been provided to the lands affected due to construction of this project. Water from River Coleroon is being pumped and utilized for combined water supply scheme. Also, Sand mining is planned in this project area. He requested to ensure proper planning considering everything into account.

**2. Mr. C. Elangovan, Ayangudi.**

He stated that the materials used in this construction of the barrage are of good quality and the standard of construction is good as like construction of Residential building.

**3. Mr. Mahendran, Keezhapuliyampattu**

When an ordinance is issued by the government and a meeting is convened, it should be conducted in a way that is easily understood by all. Not everyone is literate. He also stated that, even if he is a graduate, his medium of learning may be Tamil, so he may not be able to understand the meaning of some English words. In this regard, he inquired about the efforts taken to educate common public about this project and also the benefits received by the surrounding villages, from this project, should have been explained clearly. If it has been done, more than 200 public would have come here and expressed their opinion in support of the government.

He stated that we have conducted several protest to bring this project, but the government has made disappointment in such a way that, we are forced to think what is the necessity of this project to come now.

Moreover, during land acquisition, we helped the government by bringing the land owners who were unable to attend the registration. Inspite of that, compensation have hot been provided to the land owners yet.

Even though the previous owner of the land, who sold it unofficially due to his family circumstances, appeared in person and confronted regarding the sale of that land to the concerned Tahsildar and other officials to pay the compensation, but the officials said that compensation can only be provided to those, under whose name the land is registered. He said that the above action is a way of deceiving them.

He said that the government established a committee who assessed the land, surveyed and offered land compensation of Rs.800/- per cent. Unsatisfied by the public for compensation fixed by the committee, Complaint was given to the revenue officials several times. However, Instead of providing fair compensation, the officials suggested to give them an alternative land in return. He concluded his remarks by urging immediate action to pay the owed compensation.

**4. Mr. Jaganathan, Eyyalur**

He requested that this project should be carried out in such a way that no one raises complaints. The sand collected during construction of this barrage should be utilised for strengthening of the banks and requested to desilt the canals. With the already existing check dam, we received water for agricultural purpose. But now, that check dam is not available. So requesting to execute the project without any problem to public.

**5. Mr. Chinnasami, Adhanur.**

We are very happy that this barrage project is coming up in our area. We have fought a lot for this project and it is currently under progress. We demanded for our land to be surveyed and to be paid for it, but the land has not been surveyed for more than a month. In the meanwhile, they asked the government to cut down all the trees and plants from our lands. We have cut down even small trees. And all the lands within the river basin have now been converted into 'marapattas'. I own 35 cents of land and Rs. 123433/- was given as compensation for those 35 cents. Now, what do we do with that amount. So, he requested for fair compensation to them.

He also requested that a shutter should be constructed across the Rajan canal so as to supply water for irrigation.

**6. Mr. Dharmalingam, Kanjankollai village**

This barrage project in our area is being constructed after several protests. This project is a boon to our region. We are very happy that this project is coming up. There is no other way but to build this barrage, to prevent sea water intrusion. Due to construction of this barrage, there would be an increase in the Ground water level and this will lead to increase in number of agricultural lands. So, this project is highly appreciated.

**7. Mr. Thangarasu, Kondairuppu**

Implementation of this Barrage project will boost agriculture in our area. It helps a lot in water retention and so we are very happy. He stated that a canal passes through their village and that canal was used for irrigation in Adhanur village in the early days. But now, some people are asking to block the canal. Because of this, 40 acres of land in our village is about to dry. So he asked the officials to inspect the area and help him by providing sufficient water to that area.

**8. Mr. Manavai Maran, Adhanur**

This barrage has been constructed across Coleeroon river, between Adhanur and Kumaramangalam village. Lower Anicut Dam was built by Sir Arthur Cotton,

Emperor Karikala Cholan built Kallanai dam. About 2000 years ago, Dams were constructed by British engineers, with lime mortar and without any steel and cement. Every year, in the months of October, November and December, fresh water from river reaches sea, without any use. Therefore, he requested to create many projects like this to help people and to develop agriculture.

**9. Mr. Mohammad Ishad, Ayangudi**

I believe that this gathering is about 'Weather the project creates adverse environmental effect or not'. This project will help in prevention of sea water intrusion and ground water contamination. The Tamil Nadu Pollution Control Board should have clearly explained that this project help to prevent sea water intrusion. Also, the project will help in establishing combined water supply scheme that will benefit the surrounding villages. Eventhough, this project is of great benefits, he requested that the government should fix all restrains that occur during execution of this project. He also added that the officials should announce the list of villages that would be benefitted from the combined water supply scheme and requested to provide proper drainage facilities to prevent rain water entering the nearby villages. He concluded stating that the public would not oppose this project, if proper compensation is being given to them.

**10. Mr. Mahendran, Keezhapuliyampattu**

Although it is true that the project will bring enormous benefits, the farmers who have given land for the project are suffering since they have not been given the proper compensation. During the previous regime, the compensation amount was allotted to the farmers who had given their land and the said money is in the office of Chidambaram sub collector. Therefore, he requested that proper assessment should be made and fair compensation should be provided to the land owners. At least 3 or 5 people had been called for discussion every month, this problem would have been solved within this 5 years. But this has not happened till date. So, the project being good or bad, we will continue to raise our voice regarding the compensation, till fair compensation is given to the affected people, irrespective of the action taken against us by officials.

He requested that both the banks should be well maintained. During excessive water storage, if the embankment breaks, their village will be affected. So he requested that the embankment should be strengthened and also added that the village roads should be paved properly.

**11. Mr. Jayaraman, Adhanur.**

Someone said that I am not allowing them to walk on my pathway. Refusing that, he asked if it was him who blocked the path or is it being blocked by the revenue

department? He also requested that it should be explained in front of the District Collector.

**12. Mr. Thirumurugan, Eyyalur**

At present, there is no checkdam, the rainwater enters into the sea. Similarly, if another dam is built next to the village of Khilaeyyalur, rainwater will be prevented from entering into the sea. Right now , water is available at a depth of 14 feet in Eyyalur village. But this is not possible in other villages. So if the water is stored with the help of a checkdam, then it will lead to rise in ground water level. Therefore, if another barrage is constructed in the Coleroon River, there will be no need to part water from other states.

**13. Mr. Abdum Samad, Ayangudi**

He said that he is thankful to the government for helping to increase the water supply through the dam located here. He also requested to give importance to agriculture by utilizing the water accumulated in the dam in a proper manner. He said that this dam should be used to prevent water from flowing into the sea during the heavy rains that fall in November and December. He also requested that the checkdam should be built so that the public would not be afraid by strengthening the two banks where the water accumulates. He requested to collect as much water as possible and ensure that the farmers get water in the initial period. He said that there was a delay occurred in getting the first phase of water to the farmers.

There has been good rain this year. But most of the time there is difficulty in getting water when doing direct sowing in samba cultivation during rainless seasons. At that time, the water available in this dam should be diverted through the Vadakku Rajan canal and given to the farmers to benefit them, he said.

Also, he requested that the water stored in this barrage will increase the ground water level by providing more bore wells on the river bund sides and do the benefiting activity in future.

**14. Mr. Mohammad Harib, Ayangudi**

He said that there are 30 houses in this area where he is residing and the elderly people living in that area were unable to reach the hospital due to the water stagnation on the road during the rainy season, so the road should be upgraded.

**15. Mr. Agri K. Pasumai Valavan, Kuchipalayam, Liberation Tigers Party**

The project was developed several years ago and has been shelved. Since then many protests, such as hoisting of black flags have been held in about 27 villages on Republic Day and Independence Day. As a result, now this scheme has been

implemented. So the construction of this barrage project is a great boon for us. Due to this project, ground water level will increase in this area. Earlier bore wells were located at very few places. But now a days bore wells are available everywhere. On one side, we are selling water, on other side Several lakh liters of water is being sucked by combined water supply scheme through Tamil nadu water supply and Drainage Board between Achalpuram and Eyyalur.

Hence the ground water level is decreasing. Due to lowering of ground water table, sea water intrusion taking place. Due to this Agriculture is greatly affected. Therefore, in order to protect the agricultural land and ensure that the groundwater is not affected, the government is implementing this huge project at a cost of 410 crores.

So, this project is to protect the livelihood of the people living in this area. Even though the government announced the appropriate compensation amount for the farmers who lost their land due to this project, the money did not reach the farmers properly. Despite various talks regarding this, the compensation has not been paid till date. Therefore compensation should be paid immediately. What is the livelihood of the farmers who willingly gave the agricultural land?. Farmers were working and living on the land they gave the land. Now, we have snatched the occupation of the farmers since they have given that land for the project. Therefore, he requested that the amount due to the farmers should be provided immediately without any delay.

This Public hearing is very necessary. Officials should convey right messages in a way that the farmers can understand. Merits and demerits of this project should be explained in this Public hearing meeting.

Everyone knows the benefits of this scheme. Ground water level is decreasing. The government has taken steps to protect it. But, equal importance should be given for providing compensation to the farmers who have provided Land, in due time. He said that the livelihood of the land giver, the livelihood of their heirs, education and everything depends on this compensation amount. Finally , he concluded that wherever sand mining and desilting works are being carried out, it would be better, not to harm the farmers in course of action.

Finally, District Environmental Engineer, Cuddalore has informed that all the views of the Public is recorded and will be sent to Tamil Nadu Government State Level Environmental Impact Assessment Authority through TNPCB, Corporate Office, Chennai and the meeting came to an end.

7/11/24
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Cuddalore.

7/11/24
District Revenue Officer,
Cuddalore.

**கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே (கீழ் அணையின்கீழ் 12 கி.மீ. தூரம் RD-74/3 மைல்) மதகுகளுடன் கூடிய கதவணையினை கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆதனூர் (பாசனப்பகுதி 6601 ஹெக்டேர், 53 கிராமங்கள்) மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் வட்டம், குமாரமங்கலம் (பாசனப்பகுதி 2558 ஹெக்டேர், 35 கிராமங்கள்) இடையே அமைத்து வடக்கு மற்றும் தெற்கு ராஜன் வாய்க்கால் மூலம் 9159 ஹெக்டேர் பாசனப்பரப்பை மேம்படுத்துதல் திட்டம் குறித்து 23.10.2024 அன்று காலை 11.00 மணியளவில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆயங்குடி கிராமம், N.A.P. மஹாலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் விபரம்**

1. திரு. ம. ராஜசேகரன் - மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் மாவட்டம்.
2. செல்வி. ராஷ்மி ராணி - சார் ஆட்சியர், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.
3. திருமதி. G. கெஜலெட்சுமி - மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர் மாவட்டம்.
4. பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் - பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

******

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆதனூர் கிராமத்திற்கும் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குமாரமங்கலம் கிராமத்திற்கும் இடையில் தமிழ்நாடு நீர்வள துறையின் சார்பில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே (கீழ் அணையின் கீழ் 12 கி.மீ. தூரம் RD-74/3 மைல்) மதகுகளுடன் கூடிய கதவணை அமைப்பதற்கான திட்டம் குறித்து, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆயங்குடி கிராமம், N.A.P. மஹாலில் 23.10.2024 அன்று காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கடலூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்களையும், சார் ஆட்சியர், சிதம்பரம் அவர்களையும் மற்றும் அரசு அதிகாரிகளையும், பொதுமக்களையும், திட்டத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார்.

இத்திட்டம் தொடர்பாக நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றி பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை ஒருவர் பின் ஒருவராக பெயர், ஊரினை தெரிவித்து, பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதன்பின் தமிழ்நாடு நீர்வளத் துறையின் சார்பில், சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கடலூர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்து ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை தெரிவித்து கருத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

1. **திரு. ஜெயராமன், ஆதனூர்**

இந்த கதவணை திட்டத்தால் ஆதனூர் கிராம மக்களுக்கு எந்த ஒரு பயனும் இல்லை. இந்த பகுதியில் சரியான பாசன வாய்க்கால், வடிகால் வசதி இல்லை. இந்த திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டு தொகை பெறமுடியவில்லை. இங்கு கொள்ளிடம் ஆற்றில் கூட்டு குடிநீர் திட்டம் உள்ளது. இப்பகுதியில் மணல் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் வரன்முறைப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

2. **திரு. C. இளங்கோவன், ஆயங்குடி**

தடுப்பணை கட்டுமானம் தரமானதாக உள்ளதாகவும் அரசின் இந்த திட்டம் நல்ல தரத்தோடு உள்ளதாகவும், வீட்டு வேலை மாதிரி தரமாக செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

3. **திரு. மகேந்திரன், கீழபுளியம்பட்டு**

அரசாங்கம் ஒரு அரசாணை வெளியிட்டு, கூட்டம் நடத்தும் பொழுது அனைவருக்கும் எளிதில் புரியுமாறு நடத்தப்பட வேண்டும். அனைவருக்கும் படிப்பறிவு இருக்கும் என்று கூற இயலாது. தாம் பட்டப்படிப்பு படித்து இருந்தாலும் தமிழ்வழிக் கல்வியை பயின்ற காரணத்தால் சில ஆங்கில வார்த்தைக்கு பொருள் தெரியாது. எனவே பாமர மக்களுக்கு புரியும் வகையில் என்ன அறிவிப்பு தங்களால் கொடுக்கப்பட்டது என வினவினார். இத்திட்டத்தால் கிராமங்கள் என்ன வகையான பயன்களை பெறும் என தெரிவித்திருக்க வேண்டும். அவ்வாறு தெளிவாக விளக்கப்பட்டிருந்தால் இன்னும் 200 பொதுமக்கள் இங்கு வந்திருந்து அரசுக்கு ஆதரவாக கருத்தினை தெரிவித்து இருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டம் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என கோரி மனித சங்கிலி உள்ளிட்ட பலகட்ட போராட்டங்கள் நாங்கள் நடத்தியுள்ளோம். ஆனால் தற்பொழுது ஏன் இந்த திட்டம் வந்தது என வருத்தப்படும் அளவிற்கு அரசாங்கம் எங்களை வஞ்சித்து விட்டது என தெரிவித்தார். மேற்படி திட்டத்திற்கு எங்கள் பகுதி பொதுமக்கள் நிலத்தை அளிக்கும் பொழுது, வர இயலாத சூழ்நிலையில் இருந்த பொதுமக்களைக்கூட அழைத்து வந்து திட்டத்திற்காக நிலத்தை எழுதிக் கொடுத்துள்ளோம். நிலத்தை எழுதிக்கொடுத்த நபர்களில் சிலர் தற்பொழுது உயிருடன் கூட இல்லை. ஆனால் நிலத்திற்கான இழப்பீட்டு தொகை அரசாங்கத்தால் இன்னும் வழங்கப்படவில்லை என்பது மிகவும் வேதனையாக உள்ளது. நிலத்தை நான் இன்னாருக்கு எனது குடும்ப சூழ்நிலை காரணமாக விற்றுவிட்டேன் என நிலத்தை விற்றவரே நேரில் ஆஜராகி சம்பந்தப்பட்ட தாசில்தார் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் தெரிவித்தும் கூட, அதிகாரிகள் யார் பெயரில் பட்டா இருக்கிறதோ அவர்களுக்குத்தான் இழப்பீட்டு தொகை வழங்க இயலும் என தெரிவிக்கின்றனர். மேற்படி செயல் எங்களை வஞ்சிக்கும் விதமாக உள்ளது என தெரிவித்தார்.

அரசாங்கத்தால் நிலத்தை மதிப்பீடு செய்வதற்கு ஒரு குழு அமைத்து உள்ளனர். அக்குழு இப்பகுதி இடங்களை ஆய்வு செய்து விட்டு ஒரு சென்டுக்கு ரூபாய்.800/- இழப்பீட்டு தொகையாக வழங்க நிர்ணயம் செய்துள்ளார்கள். எவ்வாறு இதை செய்தார்கள் என இது குறித்து பலமுறை வருவாய் அலுவலரிடம் மனு அளித்துள்ளோம் என தெரிவித்தார். எங்களுக்கு

இழப்பீட்டு தொகைக்கு பதிலாக வேறு ஒரு இடத்தை அளித்து விட்டு எங்கள் இடத்தை எடுத்துக்கொள்ளலாம் என கூறினார். எது எவ்வாறாயினும் எங்களுக்கு ஏன் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை என வினவினார். எனவே இழப்பீட்டு தொகையினை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு உரையை முடித்தார்.

**4. திரு. ஜகநாதன், எய்யலூர்**

இந்த திட்டத்தை யாரும் குறை கூறாத வண்ணம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். திட்டத்தின் போது ஆற்றில் கிடைக்கும் மணலை அள்ளிக்கொள்ளுங்கள். ஆனால் அவற்றைக் கொண்டு ஆற்றின் கரையை பலப்படுத்த பயன்படுத்துங்கள் எனக் கேட்டுக்கொண்டார். வாய்க்காலை நல்ல முறையில் தூர்வார கேட்டுக்கொண்டார். ஏற்கனவே ஒரு தடுப்பு அணை இந்தப் பகுதியில் இருந்தது. தடுப்பணை இருக்கும் பொழுது எங்கள் விவசாயத்திற்கு தண்ணீர் நன்றாக கிடைத்தது. ஆனால் தற்பொழுது அந்த தடுப்பணை இல்லை. எனவே மக்களுக்கு குறைகள் இல்லாமல் இந்த திட்டத்தை நிறைவேற்றுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

**5. திரு. சின்னச்சாமி, ஆதனூர்**

எங்கள் பகுதியில் இந்த தடுப்பணை திட்டம் அமையவிருப்பது எங்களுக்கு மிகவும் சந்தோசம். இதற்காக நாங்கள் நிறைய போராட்டம் நடத்தியுள்ளோம். தற்பொழுது திட்டம் அமையவுள்ளது. நாங்கள் எங்கள் இடத்தை அளவீடு செய்ய சொல்லி பணம் கட்டி ஒரு மாதத்திற்கு மேலாகியும் நில அளவீடு செய்யப்படவில்லை. ஆனால் அதே சமயத்தில் எங்களுடைய நிலங்களிலிருந்த மரங்கள் செடிகளை எல்லாம் அரசு தரப்பில் இருந்து வெட்டச் சொன்னார்கள். சின்ன மரங்களை கூட நாங்கள் வெட்டி விட்டோம். மேலும் ஆற்றுப்படுகையில் உள்ள நிலங்களை எல்லாம் தற்போது மரப்பட்டாக்கள் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் சொந்தமாக 35 செண்டு நிலம் உள்ளது. 35 செண்டுக்கு இழப்பீட்டு தொகையாக ரூபாய்.123433/- வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை நாங்கள் வாங்கி என்ன செய்வது? எனவே எங்களுக்கு சேர வேண்டிய இழப்பீட்டு தொகையை நியாயமாக வழங்க வேண்டும் எனவும் ராஜன் வாய்க்காலில் ஒரு ஷட்டர் அமைத்து விவசாயத்திற்கு தண்ணீர் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**6. திரு. தர்மலிங்கம், கஞ்சங்கொல்லை கிராமம்**

எங்கள் பகுதியில் இந்த தடுப்பணை திட்டம் பலகட்ட போராட்டங்களுக்கு பின் அமைந்துள்ளது. இத்திட்டமானது எங்கள் பகுதிக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்த திட்டம் அமையவிருப்பது எங்களுக்கு மிகவும் சந்தோசம். மேலும் கடல் நீர் உட்புகாமல் இருக்க இந்த தடுப்பணையை கட்டுவதை தவிர வேறு வழி கிடையாது என்றும், தொடர்ந்து தடுப்பணை ஏற்படுத்தும் பொழுது நிலத்தடி நீர் மட்டம் உயரும், விவசாய நிலங்கள் பெருகும் என்று கூறி இத்திட்டத்திற்கு வரவேற்பு அளிப்பதாக தெரிவித்தார்.

**7. திரு. தங்கராசு, கொண்டாயிருப்பு**

எங்கள் பகுதியில் இந்த தடுப்பணையால் விவசாயம் பெருகும். தண்ணீரை தேக்கி விவாசயம் செய்வதற்கு இது பெரிதும் உதவும் என கூறுகிறார்கள். அதனால் எங்களுக்கு மிகவும் சந்தோசம். தங்கள் கிராமத்து வழியாக வாய்க்கால் ஒன்று செல்வதாகவும், அந்த வாய்க்காலால் ஆரம்ப காலத்தில் ஆதனூர் கிராமம் வரை பாசனம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது ஆதனூர் மக்களில் சிலர் தண்ணீர் வரக்கூடாது என அடைக்கச் சொல்கிறார்கள். ஆதலால் எங்கள் கிராமத்தில் 40 ஏக்கர் நிலம் காயும் நிலையில் உள்ளது. எனவே அதிகாரிகள் வந்து பார்வையிட்டு தங்கள் பகுதிக்கு தண்ணீர் கொடுத்து உதவும்படி கேட்டுக்கொண்டார்.

**8. திரு. மணவை மாறன், ஆதனூர்**

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் இடையே இந்த தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. கீழ் அணையினை சர் ஆர்தர் காட்டன் கட்டினார். கரிகாலசோழன் கல்லணையை கட்டினார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு கம்பி சிமெண்ட் இல்லாமல் சுண்ணாம்பு காரையால் அனைக்கரை ஆங்கிலேய பொறியாளர்களால் கட்டப்பட்டது. வருடம் தோறும் அக்டோபர் நவம்பர் டிசம்பர் மாதங்களில் ஆற்று நீர் உபயோகம் இல்லாமல் கடலில் கலந்து வீணாகிறது. எனவே, இத்திட்டம் போல பல திட்டங்களை உருவாக்கி மக்களுக்கும் விவசாயத்திற்கும் உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**9. திரு. மொகமது இஷாத், ஆயங்குடி**

இந்தக் கூட்டமானது, சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளதா? இல்லையா என்பதை பற்றிய கூட்டம் என நான் நம்புகிறேன். இந்த திட்டத்தினால் கடல் நீர் ஆற்றில் கலக்காமலும் நிலத்தடி நீர் பாதிக்காமலும் இருப்பதற்கு பெரும் பயன்பெறும். மேலும் மணலை அள்ளாமல் இருந்து, தடுப்பணை கட்டும்பொழுது, கடல் நீர் உட்புகாமல் இருக்கும் என்பது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில் தெளிவாக விளக்கியிருக்க வேண்டும். மேலும் இந்த தடுப்பணை மூலம் கிராமங்கள் பயன்பெறும் வகையில் கூட்டு குடிநீர் திட்டம் அமைத்து அருகில் உள்ள கிராமங்கள் பயன்பெற ஏற்பாடு செய்ய வேண்டும். இத்திட்டத்தால் மிகப் பெரிய நன்மை ஏற்பட்டாலும், அதில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளை அரசு சார்பில் சரி செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான முறையில் இழப்பீட்டு தொகை வழங்கும் பட்சத்தில் சிறு சிறு பிரச்சினைகள் சரி செய்யப்பட்டு விடும். எனவே அதிகாரிகள் இது குறித்து நல்ல ஒரு முடிவினை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் அருகில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார். மேலும் அதிகாரிகள் சார்பில் எந்த எந்த கிராமங்கள் கூட்டு குடிநீர் திட்டத்தால் பயன்பெறும் என அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும் அருகில் உள்ள கிராமங்களில் மழைநீர் உட்புகாமல் இருக்கும் வண்ணம் சரியான வடிகால் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் மக்களுக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டு தொகையினை சரியான முறையில் வழங்கும் பட்சத்தில் பொதுமக்களிடமிருந்து இத்திட்டத்திற்கு எவ்வித எதிர்ப்பும் இருக்காது என தெரிவித்தார்.

**10. திரு. மகேந்திரன், கீழபுளியம்பட்டு**

இந்த திட்டத்தினால் மிகப்பெரிய நன்மைகள் ஏற்படுவது உண்மையென்றாலும், இத்திட்டத்திற்காக நிலம் அளித்த விவசாயிகள் உரிய இழப்பீட்டு தொகை இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். கடந்த ஆட்சி காலத்தில் இப்பகுதி நிலம் கொடுத்த விவசாய மக்களுக்கு இழப்பீடு தொகை ஒதுக்கப்பட்டு, சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலக கணக்கில் மேற்படி பணம் உள்ளது. எனவே நிலம் அளித்தவர்களுக்கு உரிய மதிப்பீடு செய்து மேற்கண்ட பணத்தை பிரித்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். மாதத்தில் சுமார் 3 அல்லது 5 நபர்களை அழைத்து, கலந்து பேசியிருந்தால் இந்த 5 ஆண்டு காலத்தில் பிரச்சினையே இல்லாமல் முடித்திருக்கலாம். ஆனால் இதுநாள் வரையில் அவ்வாறு வழங்கப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கும் வரையில் இத்திட்டத்தால் நன்மை ஏற்பட்டாலும், தீமை ஏற்பட்டாலும் இழப்பீடு தொடர்பாக குரல் கொடுத்துக்கொண்டே இருப்போம். அதற்காக அதிகாரிகள் எங்கள் மீது எந்த வித நடவடிக்கை எடுத்தாலும் சரி என தெரிவித்தார்.

மேலும் இரண்டு கரைகளையும் நல்ல முறையில் பராமரிப்பு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். தண்ணீர் அதிகமாக தேங்கி கரை உடைப்பு ஏற்பட்டால் எங்கள் கிராமம் பாதிக்கப்படும் எனவும் கூறினார். எனவே கரையை பலப்படுத்த வேண்டும். கிராம சாலைகளை சீரமைத்து தரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

11. <u>திரு. ஜெயராமன், ஆதனூர்.</u>

நான் நடப்பதற்கு பாதை கொடுக்கவில்லை என ஒருவர் தெரிவித்துள்ளார். அக்கருத்தினை மறுத்து, இவர் நான் பாதை கொடுக்கவில்லையா அல்லது நடக்கும் பாதையை வருவாய் துறை பேரில் பட்டா போட்டு வைத்துள்ளதா? என மாவட்ட ஆட்சியர் முன்பு விளக்க வேண்டும் என தெரிவித்தார்.

12. <u>திரு. திருமுருகன், எய்யலூர்</u>

தற்பொழுது மழை பெய்தால் தடுப்பணை இல்லாமல் நேராக சென்று கடலில் கலந்து தண்ணீர் வீணாகிறது. மேலும் இதே போல் இன்னொரு அணையினை கீழஎய்யலூர் கிராமத்திற்கு அடுத்து அமைக்கும் போது மழைநீர் வீணாக தண்ணீர் கடலில் கலப்பது தடுக்கப்படும். தற்பொழுது எய்யலூர் கிராமத்தில் 14 அடியில் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் பிற கிராமங்களில் இது சாத்தியமில்லை. எனவே தண்ணீரை தடுப்ணை வைத்து தேக்கி வைத்தால் நிலத்தடி நீர் உயர வழிவகுக்கும் என தெரிவித்தார். எனவே கொள்ளிடம் ஆற்றில் மற்றொரு தடுப்பணை அமைத்தால் பிற மாநிலங்களில் இருந்து தண்ணீர் விட வேண்டும் என கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாது என தெரிவித்தார்.

13. <u>திரு. அப்துல் சமத், ஆயங்குடி</u>

இங்கு அமையவுள்ள தடுப்பாணையின் மூலம் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு உதவி செய்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறினார். மேலும் தடுப்பணையில் தேங்ககூடிய நீரினை சரியான முறையில் பயன்படுத்தி விவசாயத்திற்கு முக்கியம் கொடுத்து செயல்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார். நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்யும் பெரு மழையில் வரும் தண்ணீரை கடலில் கலக்காமல் இருப்பதற்கு இந்த அணையை பயன்படுத்த வேண்டும் எனவும், அவ்வாறு நீர் தேங்கும் பொது இரு கரைகளையும் பலப்படுத்தி, பொதுமக்கள் அச்சம் ஏற்படாத வகையில் தடுப்பணை சுவர்களை கட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இந்த தடுப்பணைக்கு வரும் நீரினை முடிந்த அளவு அதிகம் சேகரித்து, விவசாயிகளுக்கு ஆரம்ப காலகட்டத்தில் நீர் கிடைத்திட உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். ஏனெனில் விவசாயிகளுக்கு முதல் கட்ட நீர் வருவதில் தாமதம் ஏற்படுவதாக குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு நல்ல மழை கிடைத்துள்ளது. ஆனால் பெரும்பாலும் மழை இல்லாத காலங்களில் சம்பா சாகுபடியில் நேரடி விதைப்பு செய்யும் பொழுது தண்ணீர் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. அந்த நேரங்களில் இந்த தடுப்பணையில் கிடைக்க கூடிய நீரினை வடக்கு ராஜன் வாய்க்கால் வழியாக திறந்து விட்டு விவசாயிகளுக்கு பயன் தருமாறு அளிக்க வேண்டும் என தெரிவித்தார். மேலும் இந்த தடுப்பணையில் சேரக்கூடிய நீரை, நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்காக கரை ஓரங்களில் அதிகப்படியான ஆழ்துளை கிணறு ஏற்படுத்தி, அதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து எதிர்காலத்திற்கு பயன் பெறும் செயல்களை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

14. <u>திரு. முகமது ஹாரிப், ஆயங்குடி</u>

தான் தங்கியிருக்கும் பகுதியில் 30 வீடுகள் உள்ளதாகவும். மழை காலங்களில் சாலையில் மார்பளவு தண்ணீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் வாழும் முதியவர்கள்

மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் மழை காலங்களில் அவதிப்படுகின்றனர் எனவும், அதனால் சாலையை சீராமைத்து தரவேண்டும் என தெரிவித்தார்.

**15. திரு. அக்ரி க. பசுமை வளவன், குச்சிப்பாளையம், விடுதலை சிறுத்தைகள் கட்சி**

இத்திட்டமானது பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டு அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. அதன் பின்னர் பல போராட்டங்கள், குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சுமார் 27 கிராமங்களில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டு தற்பொழுது இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த தடுப்பணை திட்டம் அமைவது நமக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம் ஆகும். இந்த திட்டத்தினால் நிலத்தடி நீர் உயரும். முன்பெல்லாம் ஒரு சில இடத்தில் ஆழ்துளை கிணறு இருக்கும். ஆனால் தற்பொழுது எல்லா இடங்களிலும் ஆழ் துளை கிணறு இருக்கிறது. ஒரு பக்கம் தண்ணீரை சுரண்டி விற்பனை செய்து கொண்டு இருக்கிறோம். குடிநீர் வாரியம் மூலமாக ஒரு நிமிடத்திற்கு பல இலட்சம் லிட்டர் தண்ணீர் ஆச்சாள்புரம், எய்யலூர் போன்ற பகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டம் என்ற பெயரில் எடுக்கப்படுகிறது. எனவே நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறையும் காரணத்தினால், கடல் உப்பு நீர் உட்புகுகிறது. கடல் நீர் உள்வாங்குவதால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. எனவே விவசாய நிலத்தினை பாதுகாக்கும் பொருட்டும், நிலத்தடி நீர் பாதிக்காமல் இருக்கும் பொருட்டும், 410 கோடி செலவில் இந்த மகத்தான திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

எனவே இத்திட்டமானது இந்த பகுதியில் வாழக்கூடிய மக்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் திட்டமாக உள்ளது. மேலும் இத்திட்டத்தினால் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை அரசால் அறிவிக்கப்பட்டும், அந்தப் பணம் முறையாக விவசாயிக்ளுக்கு சென்றடையவில்லை. இது குறித்து பலதரப்பட்ட பேச்சு வார்த்தை நடத்தியும் இது நாள் வரையில் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. எனவே இழப்பீட்டு தொகையினை உடனடியாக வழங்க வேண்டும். மனமுவந்து விளை நிலத்தை கொடுத்த விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் என்னாவது? விவசாயி நிலம் கொடுத்த இடத்தில் தான் உழைத்து வாழ்ந்து கொண்டிருந்தான். தற்பொழுது அந்த இடத்தை திட்டத்திற்காக வழங்கிய பின், அந்த உழைப்பை நாம் பிடுங்கி விட்டோம். எனவே விவசாயிகளுக்கு சேர வேண்டிய தொகையை எந்த காலதாமதமும் இல்லாமல் உடனடியாக வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டம் மிகவும் அவசியமானது. விவசாயிகளுக்கு புரியும்படி சில செய்திகளை அதிகாரிகள் சொல்ல வேண்டும். இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்தால் என்ன நன்மை ஏற்படும், என்ன தீமை ஏற்படும் என்று தெளிவு படுத்த வேண்டும்.

இத்திட்டத்தினால் நன்மை இருக்கிறது எல்லாருக்கும் தெரியும். நிலத்திடி நீர் மாசு அடைந்து வருகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டிருக்கிறது. அதை பாதுகாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது. ஆனால் அதே போல இடம் அளித்த விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் கிடைத்தால் தான் நிலம் அளித்தவரின் வாழ்வாதாரம், அவர்களுடைய வாரிசுகளின் வாழ்வாதாரம், கல்வி மற்றும் அனைத்துமே இழப்பீட்டு தொகையை சார்ந்து தான் உள்ளது என தெரிவித்தார். எனவே இப்பகுதியில் எந்த இடத்தில் மணல் அள்ளினாலும், எந்த இடத்தில் தூய்மை பணி செய்தாலும் சரி விவசாயிகளை எந்த விதத்திலும் பாதிக்கமால் நடவடிக்கை எடுத்தால் சிறப்பாக இருக்கும் தெரிவித்தார்.

கூட்ட முடிவில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இதுவரையில் அமைதி காத்து தங்கள் கருத்துக்களை கூறிய பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும்

பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பதிவுசெய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலை தெரிவித்துக் கொண்டவுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,
கடலூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கடலூர்.